# அமைச்சருடன் அவசரகால உணவு




மாணவர் முகாமுக்கு வருகையளித்த சட்ட அமைச்சர் கே.சண்முகத்துடன் உரையாடுகிறார் பிடோக் வியூ உயர்நிலைப் பள்ளி மாணவர் யுட்கார்ஷ் பாண்டே.

ஸ்ட்ரெயிட்ஸ் டைம்ஸ்

அவசரகாலத்தில் உணவை எவ்வாறு பங்கிட்டு உண்பது என்பதை யுட்கார்ஷ் பாண்டே நேற்றுத் தெரிந்துகொண்டார்.

முகாமுக்கு வருகையளித்த சட்ட அமைச்சரும் இரண்டாவது உள்துறை அமைச்சருமான கே.சண்முகம் மாணவர்களுடன் சேர்ந்து பங்கீட்டு உணவை உண்டார்.

போர், இயற்கை பேரிடர், பயங்கரவாத தாக்குதல்கள் போன்ற நேரத்தில் கிடைக்கும் உணவை பங்கிட்டு உண்ண வேண்டும் என்பதை முகாமில் பங்கேற்ற மாணவர்கள் அறிந்தனர்.

ஏறக்குறைய 24 பள்ளிகளைச் சேர்ந்த 300 மாணவர்கள் கலந்துகொண்ட இந்த சமூக விழிப்புணர்வு முகாமில், முதல் முறையாக மதராஸா பள்ளி மாணவர்களும் பங்கேற்றனர்.

“அவசரகாலத்தின் புரிந்துணர்வும் குழு உணர்வும் முக்கியம் என்பதை அறிந்தேன்,” என்றார் பிடோக் வியூ உயர்நிலைப் பள்ளி மாணவரான யுட்கார்ஷ்.